சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். ஓ.எஸ்.109/2015

2018ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சுயம்புசெல்வம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | சேகர் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | | சமயம் |
| கிராமம் | | சாதி |
| தாலுகா | | வயது |

<u>குறுக்கு விசாரணை (5, 6 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

12.10.2018 - என் தகப்பனார் பெயர் சுப்பிரமணியதேவர். என் அப்பாவைப்பெற்ற தாத்தா பெயரும் சுப்பிரமணியத்தேவர் தான். அவர் பெயர் க.சுப்பிரமணியதேவர். அவர் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு வங்கியில் தலைவராக இருந்தார். என் தாத்தாவின் நெருங்கிய நண்பர் பெரியகருப்பத்தேவர் என்பது எனக்கு நன்கு தெரியும். 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல்செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை தெரியும். இந்த வழக்கில் பாகம் கேட்டு வழக்கு போட்டிருக்கிறேன். என் தாத்தாவின் நண்பர் பெரியகருப்பத்தேவரின் வாரிசு 5ம் பிரதிவாதி கதிரேசன் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். அசல் வழக்கு 17 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். என்னுடைய தாத்தாவின் நண்பர் பெரியகருப்பத்தேவர் கூட்டுறவு சங்கம் கட்டுவதற்காக தனக்கு பாத்தியப்பட்ட இடத்தை கிரயம் செய்து கொடுத்தார் என்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் கிரயபத்திரம் பார்த்ததில்லை. பெரியகருப்பத்தேவர் 37 செண்ட் இடத்தை சொசைட்டி கூட்டுறவு சங்கத்திற்கும் மற்றொரு 37 செண்ட் இடத்தை என் தாத்தாவுக்கும் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன். அவ்வாறு கொடுக்கப்பட்ட இடத்தின் சொசைட்டி கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால் அது செயல்படாமல்போய்விட்டது. அதற்கு காரணம் என்னுடைய தாத்தா தலைவர் பதவியை இழந்ததால் அந்த இடத்தில் சொசைட்டி நடத்துவதற்கு அனுமதிக்கவில்லை என்பது சரிதான். சொசைட்டிக்கு கொடுக்கப்பட்ட 37 செண்ட்

இடத்திற்கும் என் தாத்தாவுக்கு கொடுக்கப்பட்ட 37 செண்ட் இடத்திற்கும் என் தாத்தா பெயரில் பட்டா ஏற்படவில்லை. அதன் காரணம் என் தாத்தா சொத்தை அனுபவத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பெரியகருப்பத்தேவர் மற்றும் அவருக்குப்பின்னால் அவர் வாரிசுகளின் பெயரில் தான் அந்த சொத்துக்களுக்கு வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் சரிதான். பிராதில் 15வது இலக்கமாக காட்டப்பட்டுள்ள 74 செண்ட் இடம் என்பதை நான் குறிப்பிட்ட இந்த வழக்கு சொத்துதான். அந்த சொத்தில் தெற்கு பகுதியில் உள்ள இடத்தில் நடுப்பகுதியில் கதிரேசன் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். பெரியகருப்பனின் மூத்த மகன் பெயர் சக்திவேல். மகள் பெயர் சீத்தாமணி. சக்திவேலும், 5ம் பிரதிவாதி கதிரேசனும் சகோதரர்கள். சக்திவேல் காலத்திற்கு பிறகு சீத்தாமணியும், கதிரேசனும் அந்த சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 28.10.2010ல் கதிரேசனும், சீத்தாமணியும் சேர்ந்து 6ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்தை கிரயம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். 74 செண்ட் இடமும் தற்போது 6ம் பிரதிவாதி வசம் உள்ளது. 3, 4 பிரதிவாதிகள் தாவா வழக்கு சொத்து சம்பந்தமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 74 செண்ட் இடத்திற்கு தான் வழக்கு மற்ற சொத்துக்களை அந்த வழக்கில் சேர்த்திருக்கிறார்களா என்று தெரியாது. என் தகப்பனாருடன் பிறந்தவர்கள் பேச்சியம்மாள் மற்றும் போஸ் ஆவார்கள். பிராதில் போஸ் வாரிசு இல்லாமல் இறந்து விட்டார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 27.12.2010 தேதியிட்ட தான பத்திரம் 4ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கேட்டிருக்கிறேன். அவ்வாறு கேட்டதற்கு காரணம் 3ம் பிரதிவாதி போஸ்ஸின் வாரிசு இல்லை என்பதால் தான். தாவா 15ம் இலக்க சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதில்லை என்றும், அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. 15ம் இலக்க சொத்தைப்பொறுத்தும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை